தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**6 வயதுப்பிரிவு**
(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)

## தமிழ் என் தாய்மொழி

தமிழ் என் தாய்மொழி. உடலை அசைக்கும் உயிர் மொழி. என்னைப் பெற்று வளர்த்துப் பெருமை தந்தவர் அம்மா! என்னைப் பெரிய ஆளாக வளர்த்து விடுபவர் என் தமிழம்மா!

“சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!
அதைத் தொழுது படித்திடடி பாப்பா”

என்றார் பாரதி. தமிழே! என் தாயே! உன்னை வணங்குகிறேன். என் போன்ற சிறுவர்கள் உன்னைக் கண் போலக் காப்போம்.

தலைவர் மாமா போற்றிடும் மொழி! மாவீரர் மனங்களை நிறைத்திட்ட மொழி! தமிழ்மொழி காக்க உயிர் தந்தோர் பலர்! அவர் கனவாம் தமிழ் ஆளும் நிலை செய்வோம் நாம்! எம் மூச்சும் தமிழாகும். எம் பேச்சும் தமிழாகும். எம் வீச்சும் தமிழாகும்.

தமிழ் என் தாய்மொழி மட்டுமல்ல, உலகம் அறிந்திட்ட செம்மொழி!

நன்றி,

வணக்கம்.